**செய்தி வெளியீடு எண்: 1078** **நாள்: 07.12.2010**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே அறிவித்தவாறு – வெள்ள நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்வது பற்றிய அமைச்சரவையின் அவசரக் கூட்டம், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ள – புதிய தலைமைச் செயலகத்தில் உள்ள அமைச்சரவைக் கூட்ட அரங்கத்தில் இன்று (7–12–2010) மாலை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

வெள்ளத்தால் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு இரங்கலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதலும் அமைச்சரவைக் கூட்டத்தில் முதலில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், ஒன்பது மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பார்த்து திரும்பிய எட்டு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் அறிக்கைகளை நீண்ட நேரம் விவாதித்து, எடுத்த முடிவுகள் பின்வருமாறு :–

**வெள்ளத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு, பாதிக்கப்பட்ட குடிசை மற்றும் குடிசை அல்லாத வீடுகள் மற்றும் பயிர் சேதம் ஆகியவற்றுக்கு நிவாரணம் வழங்கிடவும், சாலைகள், ஏரிகள், குளங்கள் ஆகியவற்றைத் தற்காலிகமாக சீரமைப்பு செய்யவும் உத்தேசமாகத் தேவைப்படும் ரூபாய் 500 கோடி நிதியை ஒதுக்க இன்றைய அமைச்சரவை கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.**

பயிரிழப்புக்கும், சாலைகள், குளங்கள், ஏரிகள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நிரந்தரமாகச் சீரமைக்கவும் தேவையான ரூபாய் 1,607 கோடியை, தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மத்திய அரசிடமிருந்து கோரிப் பெற முடிவு செய்யப்பட்டது.

மழை, வெள்ளத்தால் இதுவரை 203 நபர்கள் இறந்துள்ளனர். இவர்களுக்கு நிவாரணமாக தலா ரூபாய் 2 இலட்சம் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. அதே போல் மழை வெள்ளத்தால் இதுவரை 5068 கால்நடைகள் இறந்துள்ளன. கறவை மாடு, உழவு மாடு போன்றவை இறந்திருந்தால் அவைகளுக்கு பத்தாயிரம் ரூபாய் வீதமும், கன்றுக்குட்டிகளுக்கு ஐயாயிரம் ரூபாய் வீதமும், ஆடுகளுக்கு ஆயிரம் ரூபாய் வீதமும், கோழிகளுக்கு முப்பது ரூபாய் வீதமும் நிவாரணம் உடனடியாக வழங்கப்படும்.

இதுவரை 8,000 குடிசைகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 40,000 குடிசைகள் பகுதியாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கணக்கிடப் பட்டுள்ளது. பல கிராமங்களில் மழைநீர் வடியாமல் உள்ள நிலையில், குடிசைகளின் பாதிப்பு எண்ணிக்கை கணிசமாக உயரும் என்றும், இவை ஓரிரு நாட்களில் முடிவு செய்யப்பட்டு, முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூபாய் 5,000 வீதமும், பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூபாய் 2,500 வீதமும் நிவாரணமாக ஒரு வார காலத்திற்குள் வழங்கப்படும்.

மேலும் மூன்று இலட்சத்து இருபதாயிரம் குடிசைகள் அல்லாத பிற வீடுகளும் வெள்ள நீர் பெருகிய காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இதற்கான நிவாரணமாக வீடு ஒவ்வொன்றுக்கும் தலா ரூபாய் 1,500 வீதம் உடனடியாக வழங்கப்படும்.

மீனவர்கள் படகு, கட்டுமரம், வலை ஆகியவை இந்தப் பெருமழை காரணமாக முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தால் புதிதாக வாங்குவதற்கு 7,500 ரூபாய் வீதமும், ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தால் அவைகளை பழுது பார்ப்பதற்கு 2,500 ரூபாய் வீதமும் நிவாரண உதவியாக வழங்கப்படும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், தொற்றுநோய் பரவாமல் தடுக்க போர்க்கால அடிப்படையில் சுகாதாரப் பணிகளை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையும், மக்கள் நல்வாழ்வுத் துறையும் மேற்கொள்ளும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சிறப்பு ஆணையர்களின் அறிக்கையின்படி, சுமார் 15 இலட்சம் ஏக்கர் பயிர் நீரில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ள நீர் வடிந்தவுடன், பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் முழுமையாகக் கணக்கிடப்பட்டு, 50 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டுள்ள நெற்பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூபாய் 8,000 வீதமும், நெல் தவிர மற்ற பயிர்களுக்கு அனுமதிக்கப்பட்ட அளவிலும் நிவாரணம் வழங்கப்படும். மேலும் மறுசாகுபடிக்குத் தேவையான விதை, உரம் போன்ற இடுபொருட்களைப் போதிய அளவு இருப்பு வைத்து வழங்கவும், பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் வேளாண்மைத் துறை மற்றும் கால்நடைத் துறை மேற்கொள்ளும்.

நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், வெள்ள பாதிப்பினை மதிப்பீடு செய்ய ஒன்பது மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட ஆணையர்களே தொடர்ந்து நடைபெற்றுவரும் வெள்ள நிவாரணப் பணிகளையும் ஆய்வு மேற்கொண்டு கண்காணிப்பர்.

இது தவிர, ஆய்வு செய்த சிறப்பு ஆணையர்களின் அறிக்கையின்படி, கடலூர் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பெருத்த பாதிப்பிற்கு வடிகால் வசதி முறையாக இல்லாததுதான் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், கடலூரில் வெள்ளாறு, பரவனாறு, உப்பாறு ஆகிய ஆற்றுப் படுகைகளில் வடிகால் வசதி ஏற்படுத்துவதற்கான திட்டமும், காவிரி டெல்டா பகுதிகளில் கொள்ளிடம், அரிச்சந்திரா நதி, வெண்ணாறு, பாமிணியாறு, கோரையாறு, வளவனாறு, வெட்டாறு போன்ற டெல்டா பகுதிகளில் உள்ள ஆற்றுப் படுகைகளில் வடிகால் வசதிகளை ஏற்படுத்தித் தரும் வகையிலும், நீண்டகால வெள்ளத் தடுப்பு மற்றும் வடிகால் திட்டங்களைத் தீட்டி, வருங்காலத்தில் செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவும் முடிவு செய்யப்பட்டது.

* * * * * *

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9